முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**SOP No.88/2025**

**நாள்.12.03.2026**

ம.சா.1 திரு.கிருபாகரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது உண்மையான பெயர் பாலகிருபாகரன் என்றால் எனது பழைய பெயர் பாலகிருபாகரன் ஆகும். நான் 1994ம் ஆண்டு பிறந்தேன். இந்துவாக பிறந்தேன் என்றால் சரிதான். இறந்துபோன பாஸ்டர் ஜோசப் மோசஸ் என்பவரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் எனக்கு அவர்தான் பெயர் வைத்தார். சிறுவயதில் இருந்து தெரியும். நான் எப்போது கிறிஸ்துவராக மதம் மாறினேன் என்றால் 2005ம் ஆண்டு முதல் சபைக்கு சென்று கொண்டிருந்தேன். முறையாக கிறிஸ்துவ மதத்திற்கு மாறியது 2012ம் ஆண்டு. எனக்கு ஞானஸ்நானம் செய்யப்பட்டு அதற்கான சான்றிதழ் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். கிருபாசனம் கிறிஸ்துவின் சபை என்ற பெயரில் தமிழ்நாடு உட்பட பிற மாநிலங்களில் சபை செயல்பட்டு வருகிறது என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது. இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் பக்கத்தில் உள்ள மாவட்டங்களில் இயங்கி வருவது எனக்குத் தெரியாது. கிருபாசனம் கிறிஸ்துவின் தலைமை சபை கன்னியாகுமரி மாவட்டம் காஞ்சிரங்கோடுவில் உள்ளது என்றால் இல்லை. இராமநாதபுரத்தில் உள்ளது. இறந்துபோன பாஸ்டர் ஜோசப் மோசஸ் என்பவர் காஞ்சிரங்கோடுவில் உள்ள சபையில் விசுவாசியாக இருந்து ஊழியராக வேலை செய்து வந்தார் என்றால் அவர் சபைகளில் விசுவாசியாக இருந்துள்ளார்.

இந்த வழக்கில் பாஸ்டர் ஜோசப் மோசஸ் என்பவரின் பாஸ்புத்தகத்தினை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 பாஸ்புத்தகம் இறந்துபோன பாஸ்டர் ஜோசப்



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.12 16:56:13 +0530

மோசஸ்–ன் தனிப்பட்ட பெயரில் உள்ள கணக்கிற்கானது என்றால் அதில் உள்ள தொகை சபைக்கான காணிக்கை பணமாகும். அதை தனிநபர் கணக்கில் போட்டுவைத்துள்ளார். அந்த வங்கிக்கணக்கு 2007ம் ஆண்டு துவக்கப்பட்டது என்றால் குறிப்பாக தெரியவில்லை. எந்த சபையின் காணிக்கை பணத்தை அவர் அவ்வாறு வங்கி கணக்கில் போட்டுவந்தார் என்றால் இராமநாதபுரம் கிருபாசனம் கிறிஸ்துவ சபையில் வரும் காணிக்கைகளை செலவுகள் போக மீதி தொகைகளை போட்டுள்ளார்.

ம.சா.ஆ.2 வங்கி கணக்கு 2003 ல் துவங்கப்பட்டது என்றால் எனக்கு குறிப்பாக தெரியாது. மேற்படி ஆவணத்தில் அவ்வாறு உள்ளது என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கும் மேற்படி பாஸ்டர் ஜோசப் மோசஸ் பெயரில் உள்ள தனிநபர் வங்கிகணக்கு என்றால் அதுவும் சபைக்கு சேரவேண்டிய தொகையை போட்டுள்ளார். மேற்படி சபைக்கு எந்த மாதிரியான வருமானங்கள் வந்தன, என்ன செலவுகள் செய்யப்பட்டன என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். சபையின் வரவு செலவு கணக்குகளை காண்பிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ன்படி 13.10.2022ம் தேதிதான் கிருபாசன கிறிஸ்துவின் சபை பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ன்படி பாஸ்டர் ஜோசப் மோசஸ் Founder and Managing trustee ஆகவும், நெகெமியா, கிருபாகரன், கோபாலகிருஷ்ணன், களஞ்சியம், ரேவதி ஆகியோர் Board of trustee ஆக இருந்தோம் என்றால் சரிதான். அந்த டிரஸ்ட் ஆவணத்தை நான் உட்பட எல்லோரும் படித்து பார்த்துள்ளோம். அந்த டிரஸ்ட் ஆவணத்தில் அவரது தனிப்பட்ட பெயரில் உள்ள வங்கிகணக்கில் உள்ள பணத்தையோ, அவர் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களையோ காண்பிக்கவில்லை என்றால் நேரடியாக காண்பிக்கவில்லை. வேறு எதன் மூலம் காண்பித்துள்ளார் என்றால் உயில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:56:20 +0530

மூலம் காண்பித்துள்ளார். அந்த உயிலில் எந்தெந்த வங்கியில் அவரது பெயரில் பணம் உள்ளது என்றும், எந்தெந்த இடத்தில் அவரது சொத்துக்கள் உள்ளன என்று குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் நிறைய இடங்களில் சொத்துக்கள் இருந்ததாலும், பல வங்கிகணக்குகள் இருந்ததாலும் குறிப்பிட்டு காட்டவில்லை.

ம.சா.ஆ.4 பக்கம் 7ல் டிரஸ்ட்டின் பேரில் வங்கிக்கணக்கு துவங்கப்பட்டு அதை மேனேஜிங் டிரஸ்ட் நிர்வகிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போன்று பக்கம் 9ல் டிரஸ்ட்க்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், ரூ.500/– மட்டும் உள்ளதாக குறிப்பிட்டுதான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் உயிலில் அவரது பெயரில் உள்ள சொத்துக்களை டிரஸ்ட்க்கு எழுதி வைத்துள்ளார். மேற்படி டிரஸ்ட் ஆவணம் பதிவு செய்யும் போது என பழைய பெயர் பாலகிருபாகரன் என்பது கிருபாகரன் என்று மாற்றம் செய்யப்பட்டிருந்தது என்றால் கெசட்டில் மட்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. ஆதார் அட்டையில் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பம் கொடுத்து இருந்தேன். அது உடனடியாக கையில் கிடைக்கவில்லை.

பாஸ்டர் ஜோசப் மோசஸ் பதிவு செய்யப்படாத உயில் எழுதி வைத்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. அந்த உயில் என் கையில் எப்படி கிடைத்தது என்றால், அவர் இறந்தபின்பு சபையின் உறுப்பினர்கள் ஆலோசனை செய்தபோது, உயிலில் சாட்சி கையொப்பம் செய்த லாரன்ஸ் ஸ்டாலின், தாமஸ் பீட்டர் ஆகியோர் உயில் எழுதப்பட்ட விவரத்தை சபையில் சொன்னார்கள். நான் அப்போதுதான் அந்த உயிலை முதன்முதலாக பார்த்தேன் என்றால் சரிதான்.

லாரன்ஸ் ஸ்டாலின், தாமஸ் பீட்டர் ஆகியோர் உயிலை பற்றி சொல்லவில்லை என்றாலும், பாஸ்டர் ஜோசப் மோசஸ் இறந்தபின்பு Assistant Commissioner சாமுவேல் ராஜ்குமார் என்பவரை அழைத்து அவர் முன்னிலையில் அவர்தான் மேற்படி உயிலை சபையில் வாசித்தார் என்றால் உயிலை வாசித்தது



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:56:24 +0530

சாமுவேல் ராஜ்குமார்தான். ஆனால் உயிலை பற்றி விவரங்களை மேற்படி சாட்சிகள்தான் சொன்னார்கள். இறந்துபோன ஜோசப் மோசஸ் எந்த விஷயமும் நேரடியாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும் என்று நினைப்பவர் என்றால் சரிதான். அவர் பள்ளியில் முதல்மாணவராக படித்து, டீச்சர் டிரெயின்ங் முடித்து சர்வே துறையில் வேலை பார்த்தார் என்றால் சர்வே துறையில் வேலை பார்க்கவில்லை. அவர் ஒரு எழுத்தாளர் என்றால் சரிதான். அவர் "பெயர் பொக்கிஷம்" என்ற ஒரு நூலை எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

10.11.2021 ம் தேதி உயிலை எழுதப்பட்டதாக சொல்லும் காலத்தில் ஜோசப் மோசஸ் நல்ல உடல்நிலையில் இருந்தார் என்றால் சரிதான். அதற்கு ஒரு வருடம் கழித்துதான் டிரஸ்ட் ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு கிருபாசன கிறிஸ்துவ சபை என்ற பெயரில் டிரஸ்ட் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 உயிலில் "நான் தனிப்பட்ட முறையில் செய்த ஊழியங்களில் பெற்ற வருமானத்தை கொண்டு, பல இடங்களில் அசையா சொத்துக்களை எனது பெயரில் வாங்கியுள்ளேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே உயிலில் மேற்படி சொத்துக்களின் மேல் தலைமைச்சபை என்று எண்ணப்படுகிற காஞ்சிரங்கோடு நிர்வாகத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:56:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம் .